பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 06 2026 TUESDAY 6.30 PM**

## மாநிலச்செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

**1)** வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு குடிமைப்பணி அதிகாரிகள் முழு ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

**2)** எல்-நினோ தாக்கத்தால் பருவமழை குறைந்துள்ளதையடுத்து, மாற்றுப் பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்று மாநில அரசுகளை, மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டுள்ளார்.

**3)** தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கை பராமரிக்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருவதாக முதலமைச்சர் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

**4)** கத்தார் தீ விபத்தில் உயிரிழந்த தமிழகத்தை சேர்ந்த மூன்று பேரின் உடல்களை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

**5)** வட தமிழகத்தின் ஓரிரு இடங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

. . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கான பயணத்தில் இளம் அரசு அதிகாரிகள் முழுமையாக ஈடுபட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

புதுதில்லியில் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் பணியாற்றுவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள குடிமைப் பணி அதிகாரிகள் இடையே உரையாற்றிய பிரதமர், அரசு நிர்வாகத்தின் பயன்கள், நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் சென்றடைய வேண்டும் என்று தெரிவித்தார்.

நாட்டை நிர்மாணிக்கும் பணியில் அரசு அதிகாரிகள் அர்ப்பணிப்பு உணர்வோடு கடமையாற்ற வேண்டும் என்றும், நிர்வாகத்தில் புதுமையான நடைமுறைகளை புகுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு இடையே வலுவான ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திய பிரதமர், சிறப்பான சேவையை அளிக்க நெருங்கிய ஒத்துழைப்பு அவசியம் என்றும் தெரிவித்தார்.

நிர்வாக ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் அரசு எடுக்கும் முடிவுகள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி பயணிப்பதாக அமைய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சுயசார்பு இந்தியா, உற்பத்திக்கான இந்தியா, எரிசக்தி பாதுகாப்பு, இளைஞர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளால் நாட்டில் வளர்ச்சிப்பாதையை செம்மைப்படுத்த முடியும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

கடந்த பத்தாண்டுகளில் அரசு நிர்வாகத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் நல்ல பலனை அளித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டை கட்டமைக்கும் பணியில் பெண்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்ட பிரதமர், தற்போது தேர்வு பெற்றுள்ள குடிமைப் பணி அதிகாரிகளில் 40 சதவீதம் பெண்கள் இருப்பது வரவேற்கத்தக்கது என்றும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

எல்-நினோ காரணமாக, பருவமழை குறையும் பகுதிகளில் பயிர்களை பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தென்மேற்கு பருவமழை இயல்பைவிட 43 சதவீதம் குறைவாக பெய்துள்ளதாகவும், அடுத்த மாதத்திலும் இதே நிலை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருப்பதாகவும் கூறினார்.

நாட்டில் 315 மாவட்டங்களில் மழை அளவு மிகவும் குறைவாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதில், குறைவான பாசன கட்டமைப்புகள் கொண்ட 111 மாவட்டங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்த வேண்டியிருப்பதாகவும் அவர் கூறினார்.

பருவமழை பாதிப்புக்கு உள்ளாவதையடுத்து, வறட்சியை தாங்கி வளரக்கூடிய பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், சிறு தானிய வகைகளை சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவிக்குமாறு மாநில அரசுகளை அவர் கேட்டுக்கொண்டார்.

அறிவியல்பூர்வமான நடைமுறைகள், பயிர் சாகுபடி திட்டமிடல் போன்றவற்றிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும், மாவட்ட அளவிலான தயார் நிலையை உறுதி செய்ய வேண்டும் என்றும் மாநிலங்களை அவர் கேட்டுக்கொண்டார்.

கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

விவசாயிகளுக்கான கடன் அட்டைகள் மற்றும் பயிர்காப்பீட்டு நிலுவைத் தொகைகளை விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், மாநிலங்களை கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கை பராமரிக்க மாநில அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக முதலமைச்சர் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து பேசிய முதலமைச்சர், சட்டம் — ஒழுங்கு குறித்து தமது அரசு மீது எதிர்க்கட்சிகள் அவதூறு பரப்பி வருவதாக குற்றம் சாட்டினார்.

கடந்த திமுக ஆட்சியில் சட்டம் — ஒழுங்கை பராமரிப்பதற்கான காவல்துறை இயக்குநர் நியமிக்கப்படாததால், மாநிலத்தில் சட்டம் — ஒழுங்கு பாதிப்படைந்திருப்பதாக தெரிவித்தார்.

போதைப்பொருள் விற்பனையை கட்டுப்படுத்த ஆரம்ப கட்டத்திலேயே நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

ஆனால், தற்போது மாநில அரசு போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறிய அவர், பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர் மீது வழக்கு பதியப்பட்டு, விரைந்து தண்டனை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நித்தி ஆயோக் கூட்டத்தில் தாம் பங்கேற்றது பற்றி குறிப்பிட்ட முதலமைச்சர், நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்றும், 12-ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலேயே மருத்துவப்படிப்பில் மாணவர் சேர்க்கை நடைபெற அனுமதி அளிக்க வேண்டும் என்று மத்திய அரசை தாம் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழகத்திற்கான 3 ஆயிரத்து 284 கோடி ரூபாய் கல்வி நிதியை மத்திய அரசு விடுவிக்க வேண்டும் என்றும், மாநிலத்தில் இருமொழி கொள்கை என்ற நடைமுறை தொடர வேண்டும் என்றும் அக்கூட்டத்தில் தாம் கேட்டுக்கொண்டதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

டாஸ்மாக் மது விற்பனையில் கடந்த திமுக ஆட்சியில் முறைகேடு நடைபெற்றதாக கூறப்படும் குற்றச்சாட்டை மறுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பேரவையில் இதை தெரிவித்த அவர், மது விற்பனையில் முறைகேடுகள் நடைபெற்றதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரத்தை மாநில அரசு தெரிவித்தால், அதற்குரிய விளக்கம் அளிக்கப்படும் என்றும் கூறினார்.

முந்தைய அரசின் மீது பொதுப்படையாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை ஏற்க முடியது என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கத்தார் நாட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த தமிழகத்தை சேர்ந்தவர்களின் உடல்களை விரைவில் கொண்டுவர வெளியுறவு அமைச்சகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு விஜய் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருநெல்வேலி மாவட்டம் சிதம்பராபுரத்தை சேர்ந்த பபித், பனகுடி சிவகாமிபுரத்தை சேர்ந்த சஜித்குமார், அழகிய நம்பியாபுரத்தை சேர்ந்த

சுவின் ஆகியோர் உயிரிழந்த செய்தி தமக்கு மிகுந்த வருத்த த்தையும், வேதனையையும் அளிப்பதாக கூறியுள்ளார்.

இவர்களின் உடல்களை விரைவில் தமிழகத்திற்கு கொண்டுவர இந்திய வெளியுறவு அமைச்சகமும், கத்தாரில் உள்ள இந்திய தூதரகமும் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதாக கூறியுள்ள முதலமைச்சர், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

லட்சத்தீவு மற்றும் அதனையொட்டியுள்ள பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக, தமிழகத்தில் அடுத்த ஏழு நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட தமிழகத்தின் ஓரிரு இடங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இடி மின்னலுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 40 முதல் 50

கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்றும், அவ்வப்போது மணிக்கு 60 கிலோமீட்டர் வேகம் வரை இது எட்டக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு மீனவர்கள் இப்பகுதிக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுவதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

ஈரோடு மாவட்டம் பவானி சாகர் அணையிலிருந்து வண்டல் மண் அள்ளுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-----------------

அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூரில், மத்திய அரசின் பெண்கள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ், பெண்கள் மட்டுமே கலந்துகொண்ட பிங்க் கிராம சபை கூட்டம் ஆட்சியர் திருமதி மிருணாளினி தலைமையில் நடைபெற்றது.

---------------

தருமபுரியில், பன்னிரண்டாம் வகுப்பு முடித்த மாணவர்கள் உயர்கல்வியில் சேர்வதை ஊக்குவிக்கும் வகையில், உயர்கல்வி

சேர்க்கை வழிகாட்டுதல் நிகழ்ச்சி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் இன்று நடைபெற்றது.

--------------------

திருச்சியில் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் பாலப்பணிகள் வரும் செப்டம்பர் மாதம் பயன்பாட்டிற்கு வரும் என நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

--------------

சமூக நல்லிணக்க ஊராட்சி விருது பெற விரும்பும் ஊராட்சிகள் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அடுத்த மாதம் 31-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று ஆதிதிராவிடர் நல இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

------------

சென்னை இராணிமேரி கல்லூரி வளாகத்தில், புதிதாக கட்டப்பட்டு வரும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியருக்கான விடுதி கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

---------------

சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் இன்று நகர்ப்புற சுகாதார மையங்களை பார்வையிட்டு, அங்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இதுவரை 5 தங்கம், 4 வெள்ளி, 7 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

<<<<<<**END**>>>>>>